அ.வ.எண். 196/2019

நாள் 02.07.2026

PW–2 பெரியசாமி

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நானும் வாதிகளும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் கணவன், மனைவி என்றால் சரிதான். வாதிகள் இருவரும் சகோதரிகள் என்றால் சரிதான். மருதநாயகம் பிள்ளையின் மகன் தங்கராஜ் என்றால் சரிதான். பொன்னியபிள்ளையின் மகன் வைரபிள்ளை என்றால் சரிதான். மருதநாயகன்பிள்ளை, வைரபிள்ளை மற்றும் தங்கராஜ் ஆகியோர்களுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். வைரபிள்ளையின் மனைவி காளியம்மாள் மூலம் பிறந்தவர் 1ம் வாதி பெரியக்காள் என்றால் சரிதான். அந்த பெரியக்காளை தங்கராஜ் இரண்டாம் தாரமாக திருமணம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. முதல்தாரமாகும். தங்கராஜின் மற்றொரு மனைவிக்கு பிறந்தவர் பழனியம்மாள் என்றால் சரிதான். மேற்படி பழனியம்மாளின் மகன் 1ம் பிரதிவாதி திருவேங்கடம் என்றால் சரிதான். மேற்படி அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள் என்றால் சரியல்ல. பெரியக்காளுக்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். சின்னப்பொன்னுக்கு குழந்தைகள் உள்ளார்கள். தாவா சொத்துக்களின் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் மற்றும் எத்தனை லக்கம் என்று தெரியுமா என்றால் மொத்த விஸ்தீரணம் சுமார் 4 ஏக்கர் இருக்கும். ஒரு சர்வே எண் தெரியும். அந்த சர்வே எண். 656/1 ஆகும். மற்றும் மற்றொரு சொத்தின் சர்வே எண். 666/3 ஆகும். பெரியக்காளின் தாயார் காளியம்மாள் 12.03.2014 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிகளுக்கு இடையே பல சிவில் மற்றும் பல கிரிமினல் வழக்குகள் நடந்த விபரம் எனக்கு தெரியும். தாவா சொத்துக்கள் காளியம்மாளுக்கு அவர்கள் குடும்பத்தில்ஏற்பட்ட 10.10.1974 ம் தேதி பாகத்தில் கிடைத்தது என்றால் சரிதான். காளியம்மாளை பெரியக்காள் பராமரிக்கவில்லை என்றும் அவர் இறக்கும்வரை 1ம்பிரதிவாதி

பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. காளியம்மாள் மற்றும் திருவேங்கடம் பெயர் ஒரே குடும்ப அட்டையில் இடம் பெற்றுள்ளதா என்று எனக்கு தெரியாது. பெரியக்காளுக்கும் தங்கராஜ்க்கும் இடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு வேடசந்தூர் நீதிமன்றத்தில் மு.வ.எண்.45/1982 ல் அவர் ஒரு வழக்கு போட்ட விபரம் எனக்கு தெரியும். அந்த வழக்கில் மாதம் ரூ.250/– ஜீவனம்சமாக கொடுக்க உத்தரவிட்ட விபரம் தெரியும். கடந்த 30.07.1991 ம் தேதி மொத்தமாக ஜீனம்ச தொகையை பெரியக்காள் பெற்றுக்கொண்டு, 1 ம் பிரதிவாதி பெயருக்கு தாவா சொத்துக்களை பொறுத்து பாத்திய விபர பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 26.07.2012 ம் தேதி காளியம்மாள் இறப்பதற்கு முன்னர் 1 ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. காளியம்மாள் இறப்பதற்கு முன்பும், பின்பும் திருவேங்கடம்தான் அனைத்து சொத்துக்களையும் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மொத்தமாக தொகை பெற்றுக்கொண்டு விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்த அன்றே வாதிகள் தாவா சொத்திலிருந்து விலகிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு 1 ம் பிரதிவாதி பெயரில் பாத்திய பத்திரமும் பட்டாவும் உள்ளது என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு எதிராக வேடசந்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 12/2012 ல் வாதிகள் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குதாக்கல் செய்து அவர்களுக்கு ஆதரவாக தீர்ப்பும் தீப்பாணையும் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே தீப்பாணை வழக்களின் பேரில் வாதிகள் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.02 16:56:47 +0530

Principal District Judge,
Dindigul.